## தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை – 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிலையான சொத்துக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டிய பெறுமானத் தேய்வின் அளவுக்கும் கணக்கில் காட்டப்பட்டவாறு ஏற்பாடு செய்யப்பட்ட பெறுமானத் தேய்வின் அளவுக்குமிடையே ரூபா 276,974 கூட்டு மொத்தமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவு | உரிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க அதிகாரசபையினால் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தைத் தோற்றுவித்து தொழில் நுட்ப அபிவிருத்திச் செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அந்த நிதியத்திற்குச் செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை நிதியம் தோற்றுவிக்க ப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் | |
| | (i) நி.பி 103 மற்றும் 104 | விபத்துக்குள்ளாகிய ஒரு வாகனத்திற்காக அதிகாரசபைக்கு ஏற்பட்ட ரூபா 56,279 தொகையான நிதி நட்டத்தை உரிய பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு அதிகாரசபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நி.பி 388 | காசோலைகளைத் தபாலில் அனுப்பும் போது பேணப்படவேண்டிய பதிவேடு அதிகாரசபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றுநிருபம் | |
| | (i) 5.2.1 ஆம் பிரிவு | சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய பாதீடு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>- பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவுக் கணக்கு<br>- பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை<br>- பாதீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று |
| | (ii) 8.3.9 ஆம் பிரிவு | வரிசை அமைச்சினால் தமது மேற்பார்வையின் கீழுள்ள நிறுவனங்களின் வளங்களைப் பயன்படத்தலாகாது என்ற போதிலும் அதனை கருத்தில் கொள்ளாது அதிகாரசபைக்குச் சொந்தமான ஒரு கெப் வாகனமும் சாரதியும் 2012 யூலை 09 ஆந் திகதியிலிருந்து அமைச்சின் நடவடிக்கைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | அதிகாரசபையினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஈடி/ 58 ஆம் இலக்க பொது முயற்சி | முன்னாள் தலைவருக்கு அங்கீகரிக்கப்பட்ட படிகள் ரூபா 50,000 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் |

| | | |
|---|---|---|
| | சுற்றுநிருபம் | சனவரியிலிருந்து யூலை வரை ஒரு மாதத்திற்கு ரூபா 62,695 படியாக அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 111,083 தொகையான படிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2011 யூன் 01 ஆந் திகதிய என்எஸ்சீசீ/2/7/5/5/113 ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவின் கடிதம் | கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்தை மிகைத்து சம்பளம் செலுத்தப்பட்டதன் காரணமாக அதிகாரசபையின் பணிப்பாளருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 252,450 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட விபரமான வருமான கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் செயற்பாடுகள் ரூபா 2,050,079 பற்றாக்குறையினைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்கு எதிராக ரூபா 708,537 மிகையாக இருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது ரூபா 2,758,616 தொகை நிதிசார் விளைவுகளில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. நிர்வாக செலவினம் ரூபா 5,390,754 ஆல் அதிகரித்திருந்தமை வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவினம் ரூபா 4,053,540 தொகையினால் அல்லது 21 சதவீதத்தினால் குறைவடைந்தமையும் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியமும் பிற்போட்ட மூலதன வருமானமும் ரூபா 2,701,305 தொகையினால் அல்லது 13 சதவீதத்தினால் அதிகரித்தமையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டுவரும் செலவு ரூபா 5,390,754 இனால் அல்லது 26 சதவீதத்தினால் அதிகரித்தமையும் இச்செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 2,758,616 வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்களின் பொருத்தமற்ற பயன்பாடு**

முன்னாள் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 280,000 தொகையான 02 மடிக் கணனிகள் 2014 சனவரி 22 ஆந் திகதி வரை அதிகாரசபையிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து அடுத்து வரும் ஆண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 07 மாதகால தாமதத்தின் பின்னர் 2013 ஒக்டோபர் 02 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தில் கடந்த 03 ஆண்டுகளுக்குரிய செயற்பாட்டு விளைவுகள் காட்டப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரையான காலத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் 2006 – 2008 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகள் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்தின் நடவடிக்கைகளில் அதிகாரசபையின் சுயநிதி நிரந்தரத் தன்மையை அடைந்துகொள்வதற்காகத் தேவையான செயற்பாடுகள் அல்லது இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முன்னைய ஆண்டில் அதிகாரசபையினால் உழைத்த வருமானம் ரூபா 126,526 ஆக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 57,359 வரை அதாவது 55 சதவீதம் வரை குறைவடைந்ததனால் கூட்டிணைந்த திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் அதிகாரசபை செயற்பட்டிருக்கவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட பெறுமதிகளுக்கும் உள்ளபடியான பெறுமதிகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு